RTROP.No.185/2023 – Date : 11.11.2025

CW1 – வெங்கடாசலம்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

பாப்பம்பாடி கிராமத்தில் எனக்கு எத்தனை ஏக்கர் விவசாய நிலம் உள்ளது என்றால் 10 செண்ட் வீட்டு மனை நிலமாக உள்ளது. அதில் வீடு இல்லை என்றால் சரி. வீட்டு மனைக்கு அங்கீகாரம் உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு நான் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஆர்ஜிதம் செய்த நிலம் விவசாய நிலமாக இருந்தது என்றும் தற்போது அது மனை நிலமாக இருந்தது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த நில ஆர்ஜிதத்திற்கு முன்பே நெடுஞ்சாலை எனது நிலத்தின் ஓரமாக சென்றுகொண்டிருந்தது என்றால் சரி. எனது நிலத்திற்கு அருகில் இன்னும் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்த நிலத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தள்ளி நான் குடியிருக்கிறேன்.

எனக்கு விவசாயம்தான் தொழில் என்றால் சரி. நில ஆர்ஜித அதிகாரி நிலம் ஆர்ஜிதம் செய்தது சம்மந்தமாக இழப்பீட்டு தொகை கொடுத்து நான் பெற்றுக்கொண்டேனா என்றால் குறைவாக கொடுத்தார்கள். எனது நிலத்தின் மதிப்பு நில ஆர்ஜித அதிகாரி நிர்ணயித்ததை விட அதிகம் என்பதை காட்ட ஆவணம்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது பக்கத்து நிலம் புல எண் எனக்குத் தெரியாது. அவை விவசாய நிலம் என்றால் சரி. அந்த நிலத்தின் வகைப்பாடும் பயன்பாடும் வேறு என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்த நிலம் எனது பூர்வீக சொத்தா என்றால் விலைக்கு வாங்கிய சொத்து. அதை விலைக்கு வாங்கியபோது ரூ.41,500/- வாங்கி உள்ளேன் என்றால் அது 2005ல் வாங்கியது.

எனது நிலத்தில் நீளவாக்கில் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் தென்வடலாக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. நில ஆர்ஜிதம் சம்மந்தமாக 14.01.2020ல் அறிவிப்பு வெளியானது என்றால் சரி. அந்த தேதியில் முந்தைய 3 ஆண்டுகளுக்கான விலை மதிப்பை காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பக்கத்து நிலத்தின் அரசு வழிகாட்டுதல் மதிப்பை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஆர்ஜித தேதிக்கு பிந்தைய தேதியிட்டவை என்றால் சரியல்ல. அது ஆர்ஜித தேதிக்கு பிந்தைய தேதியிட்டது என்பதால் அதை கருத்தில் கொள்ள தேவையில்லை என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள Ex.C6 முதல் Ex.C8 ஆவணங்கள் வேறு சர்வே எண்ணிற்கு சம்மந்தப்பட்டவை என்றும், ஆர்ஜித அறிவிப்பிற்கு முந்தைய 3 வருடத்திற்கானவை அல்ல என்றால் சரியல்ல.

எனது நிலத்திற்கு அருகில் உணவு விடுதி, பால் சொசைட்டி, மளிகை கடை உள்ளதாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆதாரம் இல்லை, ஆனால் உண்மையில் அவை இருக்கிறது. வணிக ரீதியான கட்டிடங்கள் உள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எங்கள் கிராமத்திலிருந்து நகரம் 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் கிராமமே தற்போது வளர்ந்து வருகிறது. நில ஆர்ஜிதத்திற்கு பின்னர்தான் எங்கள் கிராமம் வளர்ச்சி அடைந்துள்ளது என்றால் சரியல்ல.

நில ஆர்ஜித சமயத்தில் இருந்த வளர்ச்சிக்கான சரியான தொகையைதான் நிர்ணயம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ஆர்ஜித அறிவிப்புக்கு முந்தைய 3 வருடங்களுக்கான விலை விற்பனை புள்ளி விவரங்களை கணக்கில் எடுத்துக்கொண்டுதான் நிலத்தின் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த காலகட்டத்தில் இல்லாத என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. நில ஆர்ஜித அதிகாரி நிர்ணயம் செய்த நிலத்தின் மதிப்பு சரி என்றும் எனவே நிலத்தின் மதிப்பை கூட்டி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது கோரிக்கை நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.